# மெட்ரோ ரயில்கள் இரவு 11 மணி வரை இயங்கும்

சென்னை, ஆக.23: சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் நேற்று வெளியிட்ட அறிக்கை:

பயணிகளின் வேண்டுகோளுக்கு இணங்க, இன்று முதல் (23ம் தேதி) வார நாட்களில் (திங்கள் கிழமை முதல் சனிக்கிழமை வரை) மெட்ரோ ரயில் சேவை அதிகாலை 5.30 மணி முதல் இரவு 11 மணி வரை நீட்டித்து இயக்கப்படும். நெரிசல் மிகுந்த நேரங்களில் காலை 8 மணி முதல் 11 மணி வரையிலும், மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் 5 நிமிட இடைவெளியில் ரயில்கள் இயக்கப்படும். மற்ற நேரங்களில் 10 நிமிட இடைவெளியில் இயக்கப்படும்.

அனைத்து ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரசு பொதுவிடுமுறை நாட்களிலும் காலை 7 மணி முதல் இரவு 10 மணி வரை 10 நிமிட இடைவெளியில் ரயில்கள் இயக்கப்படும். பயணிகள் முகக்கவசம் அணியாவிட்டாலோ அல்லது முகக்கவசத்தை சரியாக அணியவில்லை என்றாலோ உடனடி அபராதமாக ரூ.200 வசூலிக்கப்படும். அதன்படி, ஜூன் 21ம் தேதி முதல் ஆக.21ம் தேதி வரை முகக்கவசம் அணியாமல் அல்லது சரியாக அணியாமல் பயணம் செய்ததற்காக 176 பயணிகளிடமிருந்து அபராதமாக ரூ.35,200 வசூலிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கூறப்பட்டுள்ளது.